**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# Women's Lifestyle in the Post-Sangam Era – Naladiyar

**Devasundaram Dinushika**, Assistant Lecturer, Department of Linguistics, South Eastern University, Sri Lanka.
**ORCiD: https://orcid.org/0009-0006-0844-0248**
**DOI: 10.5281/zenodo.14744875**

## Abstract

*The post-Sangam era, when love and bravery were considered the two eyes of life, is the period after the Sangam era. Since many moral books were written during this period, it is also called the period of morality. In that regard, the book of ethics that is considered next to the Thirukkural is "Naladiyar". The proverb "Nalum udumum sollukkuruti" explains that Naladiyar is of equal importance to the Thirukkural. The influence of Jainism and Buddhism in Tamil Nadu brought about a great change in the way people faced moral values. In this way, although Naladiyar is considered a moral literature, it is noteworthy that it includes women's lifestyle thoughts. When it comes to women, characteristics such as beauty, fear, modesty, and modesty are assigned to women. Jainism and Buddhism have instilled in society the philosophy of impermanence, which states that domestic life is degrading and that women are an obstacle to men's path to eternal happiness. In this context, the research problem is how the aspects of women's lives are expressed in the Naladiyars composed by Jain monks. The main objective of the study is to identify the thoughts on women's lives expressed in the Naladiyars. In particular, women should be respected in society by eliminating social inequalities for women. When femininity is respected, society will prosper. Women should live without losing their individuality. Exploring and revealing them are the secondary objectives of the study. This study is qualitative. Primary and secondary sources are used as sources of the study. Sourcebooks containing the "Naladiyar" texts are used as primary sources. Secondary sources include articles, magazines, and articles on women's issues.*

**Keywords:** Naladiyar, Lifestyle, Chastity, Women, Virtue.

## References

[1] Kalaimagal, N."Tamil arailakkiyangal valiyuruthum penngalin nanam mattrum karppin gunangal orr Aaivu." Sarvadesa tamil Aaivithzh.
[2] Chandrakala, J. "Naladiyaril penn Kattamaippu." Palthurai Pannattu Karutharangam.
[3] Madurai Mudaliar. *Naladiyar*. Monarch Graphics. Chennai. (1988).
[4] https://avvainirmala.blogspot.com Accessed on 12.12.2024.
[5] https://www.muthukamalam.com Accessed on 12.12.2024.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# சங்க மருவிய காலத்தில் பெண்கள் வாழ்வியல் – நாலடியார்

**தேவசுந்தரம் தினுஷிகா**, உதவிவிரிவுரையாளர், மொழித்துறை, தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.
**ORCiD: https://orcid.org/0009-0006-0844-0248**
**DOI: 10.5281/zenodo.14744875**

**ஆய்வுச்சுருக்கம்**

*காதலும் வீரமும் வாழ்வின் இரு கண்களாக மதிக்கப்பெற்ற சங்ககாலத்தை அடுத்துத் சிறப்புப் பெறுவது சங்க மருவிய காலமாகும். இக்காலத்தில் அறநூல்கள் பல தோற்றம் பெற்றமையினால் அறநெறிக்காலம் எனவும் அழைக்கப்படுகின்றது. அந்த வகையில், திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படும் நீதி நூல், "நாலடியார்" ஆகும். "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்ற பழமொழி, நாலடியார் திருக்குறளோடு ஒத்த பெருமையுடையது என்பதனை விளக்குகின்றது. தமிழகத்தில் ஏற்பட்ட சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கால் வாழ்வியல் நெறிகளை மக்கள் எதிர்கொண்ட நோக்கில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. அவ்வகையில், அற இலக்கியமாக நாலடியார் விளங்குகின்ற போதிலும் பெண்களின் வாழ்வியல் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பெண் என்று சொன்னால் அழகு, அச்சம், மடம், நாணம் போன்ற பண்புகள் பெண்களுக்கென வகுக்கப்பட்டுள்ளன. இல்லறவாழ்க்கை இழிவானது, ஆடவர்கள் மறுமை இன்பம் அடைவதற்கான வழியை அடைக்கும் தடையாகப் பெண்கள் அமைகின்றனர் என்னும் நிலையாமை தத்துவத்தை முன்னிருத்திய விடயங்களையே சமண, பௌத்த சமயங்கள் சமுதாயத்தில் விதைத்தன. இந்நிலையில் சமண சமயத் துறவியரால் இயற்றப் பெற்ற நாலடியாரில் பெண்கள் பற்றிய வாழ்வியல் அம்சங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதே ஆய்வுப் பிரச்சனையாக அமைகிறது. நாலடியாரில் வெளிப்படுத்தப்படும் பெண்களின் வாழ்வியல் பற்றிய சிந்தனைகளை அடையாளம் காணுதல் ஆய்வின் பிரதான நோக்கமாகும். குறிப்பாக பெண்களுக்கான சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, சமுதாயத்தில் பெண்கள் போற்றப்படவேண்டும். பெண்மைப் போற்றப்படும்போது சமுதாயம் மேன்மையுறும். பெண் தன்னுடைய தனித்துவத்தை இழக்காது வாழவேண்டும் போன்ற கருத்துகளை பதுமனார் தம் நூலில் பதிவுசெய்துள்ளார். அவற்றை ஆராய்ந்து வெளிக்கொணருதல் ஆய்வின் துணை நோக்கங்களாக அமைகின்றது. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாகஅமைகின்றது. ஆய்வின் மூலங்களாக முதன் நிலைத்தரவு, இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. முதன்நிலைத்தரவுகளாக நாலடியார் உரை அடங்கிய மூலநூல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாம் நிலைத்தரவுகளாக நாலடியார் குறித்து வெளிவந்த கட்டுரைகள், சஞ்சிகைகள், மேலும் பெண்கள் தொடர்பான சிந்தனைகள் இடம்பெற்ற கட்டுரைகள் போன்றன பயன்படுகின்றன.*

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**திறவுச்சொற்கள்:** *நாலடியார்*, வாழ்வியல், கற்பு, பெண்கள், அறம்.

**முன்னுரை**

தமிழர்களின் வாழ்வியலை விளக்கும் வகையில் இலக்கியங்கள் பல்வேறு காலக்கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவையாவும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்தி அவர்களின் வாழ்வைச் செழுமையடையச் செய்கின்றன. சங்ககால மக்கள் போரையும் காதலையும் இரண்டு கண்களாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். அதற்குப் பிறகு தோன்றிய காலகட்டமாகிய சங்கம் மருவிய காலத்தில் சங்க இலக்கியப் பாடுபொருள் முற்றிலுமாக மாறுபட்டு இருப்பதைக் காணமுடிகிறது. நாலடியார் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பகுப்புகளை உடையது. அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல் என இரண்டு இயல்களையும் 13 அதிகாரங்களையும் கொண்டது. பொருட்பால் அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகையியல், பன்னெறியியல் என 7 இயல்களையும் 24 அதிகாரங்களையும் கொண்டது. காமத்துப்பால் துன்பவியல், இன்பவியல் என இரண்டு இயல்களையும் மூன்று அதிகாரங்களையும் கொண்டு அமைந்துள்ளது. இந்நூல் வேளாண்வேதம், நாலடி நானூறு என்றும் அழைக்கப்படுகிறது. திருக்குறளுக்கு அடுத்த நிலையில் புகழ்பெற்ற நூலாக நாலடியார் திகழ்கின்றது. பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஒரே தொகைநூல் நாலடியார். இந்நூலைத் தொகுத்தவர் பதுமனார். நாலடியாரில் சமண சமயக் கருத்துக்கள் பல்வேறு இடங்களில் இடம்பெறுகின்றன. அற இலக்கியங்கள் குறிப்பாக நாலடியார் பல்வேறு புலவர்களால் படைக்கப்பட்டிருப்பினும் அவர்கள் வகுத்துள்ள பெண்கள் குறித்த வாழ்வியல் அம்சங்களை நாலடியாரில் நோக்க முடிகின்றது. இவ்வமைப்பை நாலடியார் பாடல்களின் கட்டமைப்பாக கொள்ளலாம். இவற்றின் அடிப்படையில் நாலடியாரில் பெண்களுக்கு அமைந்துள்ள வாழ்வியல் முறைகளை விளக்கும் வகையில் இவ்வாய்வுஅமைகின்றது.

**பெண்ணழகு**

இன்றைக்கு சந்தனக் கிண்ணத்தில் சந்தனம் வைத்துப் பயன்படுத்துவதுபோல் அன்றைக்குச்,

**சாந்தகத் துண்டென்று செப்புத்**
**திறந்தொருவன்**
**பாம்பகத்துக் கண்டதுடைத்து (நாலடி., 126)**

என்றுகுறிப்பிடுகின்றதுநாலடியார். மேலும், பெண்கள் முகத்திற்கு மஞ்சள் பூசுகின்ற வழக்கத்தை, "**குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல" (நாலடியார், பா. 131)** என்று நாலடியார் குறிப்பிடுகின்றது. மேலும் முல்லை மலரினையும், முத்தினையும் ஒத்த பற்களை கொண்டவள் பெண் என்பதனை, "**முல்லை முகைமுறுவல்**

**முத்தென்று இவை பிதற்றும்…" ( நாலடியார், பா. 45)** அடுத்து பெண்கள் தங்களை தாங்களே ஆபரணங்கள், மாலைகளைப் போட்டு அலங்கரித்துக் கொண்டனர் எனவும் நாலடியார் பெண்களின் அழகு மற்றும் அணிகலங்கள் பற்றி கூறுகின்றது. இதனை,

**கம்மம் செய் மாக்கள் கருவியொடுக்கிய**
**மம்மர் கொள் மாலைமலராய்… (நாலடியார், பா. 393)**

**கற்புநெறி**

கற்பு என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்பது பொருள். 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாரதியார் கற்பு என்பதை ஆணுக்கும் பெண்ணுக்கும் அதை பொதுவில் வைப்போம் என்று கூறுகிறார். ஆனால் நாலடியார் ஒரு பெண் எந்த சுழ்நிலையிலும் கற்பு நெறியைத் தவறாமல் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதை,

**நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்**
**மேலாறு மேலுறை சோரினும் மேலாய**
**வல்லாளாய் வாழும்ஊர் தற்புகழும் மாண்கற்பின்**
**இல்லாள் அமர்ந்ததே இல். (நாலடியார், பா. 383)**

எனும் அடிகள், வீட்டின் நான்கு பக்கங்களும் இடிந்து மேலே மழைத்துளி வடிந்து வந்தாலும் அந்த வீட்டில் உள்ள பெண் தன் கற்பு நெறியுடன் பிறர் புகழும்படியாக இல்லறம் நடத்தவேண்டும் என்று கூறியுள்ளதைக் காணமுடிகிறது. மேலும், கற்புடைய பெண்ணானவள் பிறர் தன்னைப் பார்த்து ஆசைப்படாத வண்ணம் அடக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என நாலடியார் கூறுகின்றது.

**நாணம்**

நாணம் என்ற சொல்லுக்கு வெட்கப்பட வேண்டியதற்கு வெட்கித் தலைகுனிந்து நிற்றல் நாணம் என்ற பண்புபெண்ணுக்கு வேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. அதுபோல் நாலடியாரும் நாணம் என்ற பண்பை குணநலனுடன் ஒப்பிடுகிறது. ஒரு பெண்ணுக்கு நாணம் என்ற பண்பு எல்லாவற்றிலும் சிறந்தது என்பதை நாலடியார் குறிப்பிடுகின்றது. **"நாணுடையாள் பெற்றநலம்" (நாலடியார், பா. 386)** என்ற அடி பெண்ணுக்கு நாணம் என்ற குணம் இருந்தால் மற்ற எல்லா நலன்களையும் பெற்றுத் திகழ்வாள் என்று கூறுகின்றது. இக்கருத்தின் மூலம் நாணம் என்ற பண்பு பெண்ணுக்குத் தேவை என்பதை வலியுறுத்துவதை அறியமுடிகிறது. மேலும், பெண்ணானவள் தம் சமுகத்திடமும் நாணம் என்னும் பண்புடன் திகழ்தல் வேண்டும் என நாலடியார் கூறுகின்றது. இதனை, **"ஊர் நாணும் இயல்பினாள்." (நாலடியார், பா. 384)** என்ற பாடலடி விளக்குகின்றது.

**இளமை நிலையாமை**

பதினெண் கீழ்க்கணக்கு அற நூல்கள் யாவும் அறக்கருத்துக்களை வலியுறுத்துவதோடு நிலையாமைக் கருத்துக்களையும் வலியுறுத்துகிறது. பெண்ணைத் தாழ்வாகக் கூறும்

வகையிலும் இளமை நிலையாமையை எடுத்துக்கூறும் வகையிலும் பெண்ணின் அழகைக்கூறி ஆடவர்கள் அணுகக் கூடாது என்ற வகையிலும் கூறியுள்ளதைக் காணப்படுகிறது.

**தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா**
**வீழா இறக்கும் இவள்மாட்டும் காழிலா**
**மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்**
**அம்மனைக்கோல் ஆகிய ஞான்று. (நாலடியார், பா. 14)**

என்ற பாடல் பெண் என்பவள் முதுகு தாழ்ந்து உடம்பின் கட்டுத்தளர்ந்து, தலை நடுங்கி, கையில் தடிஊன்றி, விழுந்து இறக்கப்போகும் முதிய நிலையில் இவள் மேல் கொண்டுள்ள அறிவற்றவரின் காம மயக்கத்தை, இவள் இப்போதுபிடித்திருக்கும் ஊன்றுகோல் அவள் தாய் ஊன்றுகோல் பிடித்திருக்கும் வயதில் இவள் இளமையோடு கூடிய அழகுடன் காமத்தன்மை பெற்றிருப்பாள். எனவே இளமை நிலையாமையை உணர்ந்து பெண்ணை விரும்பும் செயலைக் கைவிடுக என்று குறிப்பிட்டுள்ளது. மனித உயிர்களில் பருவமாற்றம் என்பது இயல்பானது. பெண்ணை விரும்புதல் கூடாது என்று வெளிப்படையாக கூறியிருக்கலாம். இளமை நிலையில்லாதது என்பது ஆண், பெண் இருவருக்கும் உரியது. அதை பெண்ணின் மேல் மட்டும் ஏற்றிக் கூறுவது, அவளைத் தாழ்த்திக் கூறுவதுபோல் அமைதுள்ளமை நோக்கத்தக்கது. நாலடியார் 17ஆம் பாடலிலும் இவ்விடயம் காணப்படுகின்றது.

**பெண்ணின் வெற்றி**

ஆணின் வெற்றியையும் பெண்ணின் வெற்றியையும் ஒப்பிட்டு இகழக் கூடிய நிலையை நாலடியாரில் காணமுடிகின்றது. தழை அலைகள் சிதைக்கின்ற கடற்கரைச் சோலையையுடைய குளிர்ந்த துறைவனே, ஒருவர் மேற்கொண்ட காரியம் ஊழ்வினையால் கூடி வரவில்லை என்றாலும் அச்செயலில் தளராமல் முயல்வதே ஆடவர்க்குரிய ஆண்மைப் பண்பாகும். ஊழ்வினையால் கூடி வருமாயின் பெண் மக்களும் அதனை முடித்து பெருமையடைவர்.

**இசையா தெனினும் இயற்றி யோராற்றால்**
**அசையாது நிற்பதாம் ஆண்மை - இசையுங்கால்**
**கண்டல் திரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப**
**பெண்டிரும் வாழாரோ மற்று. (நாலடியார், பா. 194)**

என்ற அடிகள் ஓர் ஆண் எக்காரணத்திலும் தன் வலிமையால் எளிதில் வெற்றிபெறமுடியும் என்றும் பெண்ணின் வெற்றி என்பது ஊழ்வினையால் மட்டும் நிகழக்கூடியது என்ற இழிவான சிந்தனை காணப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

**குழந்தைப்பேறு**

செல்வம் எவ்வளவு இருப்பினும் அது குழந்தைச் செல்வத்திற்கு ஈடாகாது. அந்த வகையில் ஒரு பெண் பிறந்துவிட்டால் தாய்மைத் தன்மையினை கட்டாயம் எய்தல் வேண்டும். இதனை நாலடியார், மனைவியாக வந்து வாய்த்தவள் மாட்சிமைப்பட்ட நல்ல குணங்களும்

குழந்தை பாக்கியமும் இல்லாதவளாயிருந்தால் அவளை நீக்கி வைப்பது என்பது முடியாது. இல்வாழ்க்கை தானாகப் பெற்ற துன்பம் என்பதை,

**மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்**
**புண்டான் கழிந்தற் கருமையால் (நாலடியார், பா. 56: 1-2)**

என்றஅடிகள் உணர்த்துகின்றன.

**கணவனை வருத்தக்கூடியவள் பெண்**

கணவனுக்கு எதிரே பேசக்கூடாது. விடியற்காலையில் சமையலறைக்குள் நுழைய வேண்டும். சமைத்த உணவை பரிமாற வேண்டும். இம்மூன்றையும் செய்தால் அவள் பெண். இல்லையென்றால் பேயை நிகர்த்தவள். கணவனைக் கொல்லும் ஆயுதத்திற்குச் சமமானவள் என்பதை.

**ஏறியென் றெதிர்நிற்பாள் கூற்றம் சிறுகாலை**
**அட்டில் புகாதாள் அரும்பிணி - அட்டதனை**
**உண்டிஉதவாதாள் இவ்வாழ்பேய் இம்மூவர்**
**கொண்டானைக் கொல்லும் படை. (நாலடியார், பா. 363)**

என்ற பாடலில் பெண்ணுக்கு என்ற சில வரையறைகள் அல்லது கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறது என்று கூறுலாம். மனைவி என்பவள் வெளியில் செல்லாமல் இல்லறப் பணிகளை மட்டும் செய்ய வேண்டும். தன் இல்லறப் பணியை காலைப்பொழுதே தொடங்கிவிடவேண்டும் என்ற வரையறையைக் காணமுடிகிறது.

**விருந்தோம்பல்**

நம் பண்பாடடில் பகைவர்களாக இருந்தாலும் வீட்டிற்கு வந்தால் அவர்களை வா என்று அழைக்கும் வழக்கம் நம் மக்களிடையே உள்ளது. மகிழ்ச்சியிலும் பெரும் மகிழ்ச்சிலும் மற்றவர்களுக்கு கொடுத்து ஆனந்தப்படுவதே விருந்தோம்பல் ஆகும். விருந்தோம்புதல் பெண்களின் சிறந்த பண்பு என்பதை, "**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்" தொல்.,பொருள். 1098)** என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறிய முடிகின்றது. விருந்தினரைப் பாதுகாத்தல், சுற்றத்தாரைக் காத்தலும் பெண்ணின் பண்புகளாகக் கூறுகிறது. மனைவி என்பவள் இல்லறத்தின் கடமையாகக் கருதப்படும் விருந்தோம்பல் முறையைப் பின்பற்ற வேண்டும். கற்பொழுக்கமுடைய அயிராணி (இந்திராணி) தேவரின் மனைவி போல வாழ்கின்ற பெரிய புகழ்வாய்ந்த மகளிராக இருந்தாலும் விருந்தோம்பல் முறையைப் பின்பற்றுதல் இன்றியமையாதது என்பதை,

**அரும்பெற்று கற்பின் அயிராணி யன்ன**
**பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும் - விரும்பிப்**
**பெறுநசையாற் பின்னிற் பாரின்மையே பேணும்**
**நறுநுதலாள் நன்மைத் துணை. (நாலடியார், பா. 381)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

என்ற பாடல் விளக்குகிறது. ஒரு பெண் வறுமையில் வாடும்போது, தம் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு உணவளிப்பது அவளின் கடமை என்று நாலடியார் கூறுகின்றது. குடத்துத் தண்ணீரைக் காய்ச்சி உண்ணுகின்ற வறுமை வந்த காலத்திலும் கடல் தண்ணீரைக் குடித்தாலும் பசி தீராத உறவினர் வந்தாலும் அவர்களை உபசரிக்கும் கடமையைச் சிறப்பாக மேற்கொள்கின்ற மென்மையான சொற்களைப் பேசக்கூடிய பெண்ணே வாழ்க்கைக்கு உரிய மாட்சிமை பொருந்தியவள் ஆவாள் என்பதை,

**குடநீர் அட்டுண்ணும் இடுக்கண் பொழுதும்**
**கடல்நீர் அறவுண்ணும் கேளிர் வரினும்**
**கடன்நீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி**
**மாதர் மனைமாட்சி யாள். (நாலடியார், பா. 382)**

என்ற செய்யுள் விளக்குகின்றது. மேலும், அறுசுவையாகிய உணவினை மனைவி அனைவருக்கும் அன்போடு பரிமாறுதல் வேண்டும் எனவும் நாலடியார் கூறுகின்றது. இதனை, **"அறுசுவையுண்டி அமர்ந்திலாள் ஊட்ட..." (நாலடியார், பா. 1)** எனும் பாடலடி விளக்குகின்றது.

**மனைவி இல்லா வீடு பாழ்மனை**

மனைவி என்பவள் குடும்பத்தின் அடிப்படைத் தேவையை நிறைவு செய்பவளாக ஆணிவேராக நின்று குடும்பத் தேவைகளை நிறைவு செய்கிறாள். இதனை, **"மாண்டமனையாளையில்லாதான் இல்லகம் / காண்டற்குஅரியதோர் காடு (நாலடியார், பா. 361)** என்ற அடிகள் மனைவி இல்லாத வீடு காண்பதற்கு கொடிய காடாகும் என்று கூறுகிறது.

**கல்வி**

கல்வியின் சிறப்பை பல இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. நாலடியாரிலும் ஒரு அதிகாரம் இடம்பெற்றுள்ளது. இவ்வதிகாரத்தில்,

**குஞ்சி யழகுங் கொடுத்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்**
**கல்விஅழகேஅழகு. (நாலடியார், பா. 131)**

தலை முடியின் அழகும் வளைந்து உடுக்கப்படும் ஆடையின் கரையழகும், மஞ்சள் நிறத்தின் அழகும் மக்களுக்கு அழகல்ல நாம் நல்முறையில் வாழ வழிவகுக்கும் கல்வியின் அழகுதான் சிறந்த அழகு என்று குறிப்பிட்டுள்ளது. இச்செய்யுள் ஆண், பெண் என்று பாராமல் பொதுவாக மக்களுக்குரிய கல்வியழகை குறிப்பிட்டுள்ளதை நோக்க முடிகிறது.

**பெண்களின் காதல்**

காதலனைப் பிரிந்த மகளிர் தம் காதலர் பிரிந்த நாள்களைக் கைவிரல்களால் எண்ணுவர் என்கின்றது. இதனை,

**செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண்**
**கொண்டநீர் மெல்விரல் ஊழ்தெறியா விம்மித்தன் -**
**மெல்விரலின் நாள்வைத்து நங்குற்றம்**
**எண்ணுங்கொல்,... (நாலடியார், பா. 394)**

என்ற நாலடியார் பாடல் வரிகளால் அறியமுடிகின்றது.

**பெண்ணின் கடமை**

பெண்ணின் கடமை குறித்து நாலடியார் பாவை நீரினை பகிர்ந்துஉண்ணும் அளவிற்கு மிகுதியான வறுமை வந்தபோதும், உறவினர் திரண்டு வந்த போதிலும் இனிமையாக பேசும் பண்பு பெற்றிருத்தல் வேண்டும் என்கின்றது நாலடியார், இதனை,

**குடநீர் அட்டுஉண்ணும் இடுக்கண் பொதும்**
**கடல் நீர் அறவுண்ணும்… (நாலடியார், பா. 382)**

**முடிவுரை**

தொகுத்துநோக்கும் போது, அறத்தினை வலியுறுத்தும் நீதி நூலாக நாலடியார் விளங்குகின்றது. அந்த வகையில் நாலடியாரில் பெண்ணை இகழ்ந்துரைக்கக் கூடிய வகையில் பல்வேறு கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமையினை காணமுடிகின்றன. பெண் என்பவள் பேயாகவும் நஞ்சாகவும் துன்பம் தருபவளாகவும் இகழ்ந்துரைக்கப்பட்டுள்ளதைக் அவதானிக்க கூடியதாக உள்ளது. துன்பம் தரும் பெண்ணின் இயல்புகளை நாலடியார் குறிப்பிடினும், கல்வி, விருந்தோம்பல், கற்புநெறி, இல்லறம், காதல், தாய்மை போன்ற பல்வேறு வாழ்வியல் அம்சங்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றமையினை நாம் காணக் கூடியதாகவுள்ளது.

**குறிப்புகள்**

[1] கலைமகள், ந. *தமிழ் அற இலக்கியங்கள் வலியுறுத்தும் பெண்களின் நாணம் மற்றும் கற்பின் குணங்கள் ஓர் ஆய்வு.* சர்வதேச தமிழ் ஆய்விதழ்
[2] சந்திரகலா, ஜெ. *நாலடியாரில் பெண் கட்டமைப்பு.* பல்துறை பன்னாட்டுக் கருத்தரங்கம்.
[3] மதுரை முதலியார். *நாலடியார்.* மோனார்க் கிராபிக்ஸ். சென்னை. (1988).
[4] https://avvainirmala.blogspot.com 12.12.2024 அன்று அணுகப்பட்டது.
[5] https://www.muthukamalam.com 12.12.2024 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **https://creativecommons. org/licenses/by/4. 0/** *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.